Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) 

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 20 Click - 06

September 2024 ₹. 1

**அறிவிப்பு**

நமது குடும்ப நலன் பாதுகாப்பு கருதி நமக்கு நாமே திட்டத்தில் உடனே இணைந்திடுங்கள்.

- CVPA

# நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## CVPA 29-ம் ஆண்டு விழா மற்றும் குடும்ப விழாவில் தமிழக அமைச்சர்கள் தொடங்கி வைக்கின்றார்கள்!

நமது சங்கத்தின் ஆண்டு விழாவை ஒவ்வொரு ஆண்டும் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்து வருகிறோம். கடந்த 29 வருடங்களாக அக்டோபர் இரண்டாம் தேதியை தவறவிடாமல் இதே தேதியில் நடத்தி வருவது CVPA ஆண்டு விழாவின் சிறப்பாகும். ஆரம்ப காலகட்டத்தில் சங்கம் நடத்தும் நிகழ்ச்சி அல்லது விழாவில் குடும்ப பெண்கள் அவ்வளவு எளிதில் கலந்து கொள்ள மாட்டார்கள். ஆனால், CVPA குடும்ப விழா எந்த பகுதியில் நடத்தினாலும், குடும்பம் குடும்பமாக, வயது வித்தியாசமின்றி, அனைவரும் கொண்டாடி மகிழும் ஒரு திருவிழா போல் அமைந்து வருகிறது. குறிப்பாக இந்த விழா சிறப்பாக அமைய வேண்டும் என்பதில், ஒவ்வொரு நிர்வாகமும் தனி கவனம் செலுத்தி வெகு சிறப்பாக குடும்ப விழாவை நடத்தி வருகிறது. இதற்கு விளம்பரதாரர்களின் பங்கும் மிக முக்கியமாக பார்க்கப்படுகிறது. தற்போது அமைந்திருக்கும் புதிய நிர்வாகம் மிகக் குறுகிய காலத்தில் இந்த குடும்ப விழாவை ஏற்பாடு செய்துள்ளது. தலைவர் திரு. புருஷோத்தமன் அவர்கள், செயலாளர் திரு. துரைபாபு அவர்கள், பொருளாளர் திருமதி.கௌரி பார்த்தசாரதி அவர்கள், PRO திரு. பாலச்சந்தர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி குடும்ப விழாவை சிறப்பாக நடத்தி முடிக்க முனைப்பு காட்டி வருகின்றனர்.

சென்னை புரசைவாக்கம், தர்ம பிரகாஷ் திருமண மண்டபத்தில் இவ்விழா காலை 10 மணி அளவில் தொடங்குகிறது. விழாவை திரைப்பட நடிகை செல்வி. சச்சு அவர்கள் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைக்கின்றார். இதனைத் தொடர்ந்து அப்போலோ மருத்துவமனை சார்பாக நடைபெறும் மருத்துவ முகாம் மற்றும் ரத்த தான முகாம், சைட் அண்டு கேர் பவுண்டேஷன் நிறுவனம் நடத்தும் கண் பரிசோதனை முகாம், ஆன்வி இயரிங் சொல்யூஷன் நிறுவனம் நடத்தும் செவித்திறன் பரிசோதனை முகாம் ஆகியவற்றை பத்மஸ்ரீ முனைவர் திரு. நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்குகிறார்.

இதனை தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சியாக, நமது சங்க உறுப்பினர்கள் மிகவும் எதிர்பார்த்து காத்திருக்கும் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் துறை

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு அவர்கள், மற்றும் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை மாண்புமிகு அமைச்சர் திரு. சி.வி.கணேசன் அவர்கள் CVPA உறுப்பினர்களுக்காக தொடங்கப்படும், நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்கள். இவர்களைத் தொடர்ந்து மாநில அமைப்பாளர் திரு.சரவணன் அவர்கள், மாநில துணைத் தலைவர் திரு.அசோக் அவர்கள், மற்றும் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை கல்வியில் ஊக்குவிக்கும் விதமாக 10 மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைந்தவர்களுக்கு இதே விழா மேடையில் கல்வி ஊக்கத்தொகை வழங்கி கௌரவப் படுத்தி வருகிறோம். இதற்கான மதிப்பெண் சான்றிதழ்களை சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் பெற்று வருகின்றனர்.

நமது உறுப்பினர்களின் குழந்தைகளிடம் உள்ள தனித்திறமையை வெளிக் கொண்டு வரும் விதமாக அவர்களுக்கு என இசை நடனம் போன்ற கலை நிகழ்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர அவர்களுக்கென கவிதை போட்டி, பேச்சு போட்டி, பாட்டு போட்டி, ஓவியப் போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் சங்க நிர்வாகிகளிடம் தங்கள் பெயரை முன் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் குடும்ப விழா சிறப்பாக அமைய எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து வருகின்றனர். சங்க உறுப்பினர்கள் அனைவரும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# ★நமக்கு நாமே குடும்ப பாதுகாப்பு திட்டம்★

## Family Security Scheme (FSS)

★ நமக்கு நாமே திட்டத்தில் ஒருவர் பங்களிப்பாளராக சேர வேண்டும் என்றால், அவர் கண்டிப்பாக CVPA-ல் உறுப்பினராக இருக்க வேண்டும்.

★ நமக்கு நாமே திட்டத்தில் பங்களிப்பாளராக சேர்ந்த நாள் முதல் அறக்கட்டளையின் பயன்களை பெற, சங்க உறுப்பினர் CVPA-ல் தொடர்ந்து ரினிவல் செய்வது என்பது கட்டாயம் ஆக்கப்படுகிறது.

★ நமக்கு நாமே திட்டத்தில் பங்களிப்பாளராக இணைய வேண்டும் என்றால் CVPA-ன் நடப்பு நிர்வாகக் குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் கையொப்பமிட்ட பரிந்துரை கடிதத்தின் மூலமே, அவர்கள் அறக்கட்டளையில் பங்களிப்பாளராக இணைய முடியும்.

★ நமக்கு நாமே திட்டம் குறைந்தபட்சம் ஆயிரம் உறுப்பினர்களை இணைத்து, அதை ஒரு இலக்காக கொண்டு செயல்படுத்துவதே இத் திட்டத்தின் முதல் நோக்கமாகும்.

★ ஆயிரம் உறுப்பினர்கள் இந்த திட்டத்தில் இணைந்த பிறகு, நமக்கு நாமே திட்டம் செயல்பாட்டிற்கு வரும் பட்சத்தில், நமது கலைஞர்களுக்கு ஏற்படும் துயர விபத்து சம்பவம் மற்றும் இயற்கை மரணங்களுக்கு, அவர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு எவ்வித காப்பீடும் எடுக்காமல் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் சுமார் 2 லட்சம் ரூபாய் வரை பயனாளர்களுக்கு உடனடியாக வழங்கப்படும். (உறுப்பினர் சேர்க்கைக்கு ஏற்ப இந்த தொகை மாறுபடும்).

★ இத்திட்டத்தில் உங்களை பங்களிப்பாளராக இணைத்துக் கொள்ள ஒரே தவணையாக ஆயிரம் ரூபாய் முதலில் செலுத்த வேண்டும். இந்த தொகை நலத்திட்ட உதவி தொகையாக வங்கிக் கணக்கில் உடனடியாக வரவு வைக்கப்படும்.

★ அறக்கட்டளைக்கு பங்களிப்பாளர் செலுத்தும் தொகையான ஆயிரம் (1000/-) ரூபாயில் 200 ரூபாய் நுழைவு கட்டணமாகவும், மீதமுள்ள 800 ரூபாய் பயனாளிகளின் குடும்பங்களுக்கு பயனாளி தொகையாக வரவு வைக்கப்படும். எக்காரணம் கொண்டும் அறக்கட்டளையில் உங்கள் வங்கி கணக்கு ஜீரோ பேலன்ஸ் ஆகாமல் பார்த்து கொள்ள வேண்டும்.

★ நமக்கு நாமே திட்டத்தில் நீங்கள் பங்களிப்பாளராக சேர வேண்டும் என்றால் அறக்கட்டளையின் முன்மொழிவு படிவம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நுழைவுத் தொகை, பங்களிப்புத் தொகையை முழுமையாக செலுத்திய பிறகு எழுத்து பூர்வமாக ஏற்புத் தகவல் தெரிவிக்கப்பட்ட தேதியில் இருந்து 120 நாட்களுக்குப் பிறகு நமக்கு நாமே திட்டத்தின் பயனாளியாக அவர் தகுதி பெற்றவர் ஆவார்.

★ நமக்கு நாமே குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்படி ஒரு பயனாளிக்கு அறக்கட்டளை மூலம் ரூபாய் 200 பணம் வழங்கிய பிறகு,15 நாட்களுக்குள், பங்களிப்பாளர் அறக்கட்டளை வாயிலாக நமக்கு நாமே திட்டத்திற்கு செலுத்த வேண்டிய 200 ரூபாயை தாமதம் இன்றி செலுத்தி விட வேண்டும்.

★ ஒவ்வொரு பயனாளிகளுக்கும் பணம் வழங்கியவுடன் இது தொடர்பான அனைத்து விபரங்களும், நமக்கு நாமே திட்டத்தின் அறக்கட்டளையின் இணையதளத்தில் உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.

★ நமக்கு நாமே திட்டத்தின் படி பங்களிப்பாளரின் பணம் பயனாளிகளுக்கு வழங்கி விட்ட பிறகும் கூட அவர் பணம் செலுத்தாமல் ஜீரோ பேலன்ஸ் ஆகும் பட்சத்தில் அவர் பங்களிப்பாளர் மற்றும் பயனாளியின் தகுதியை இழக்கின்றார். மீண்டும் அவர் பங்களிப்பாளராக தொடர வேண்டும் என்றால், அறக்கட்டளை பயனாளிகளுக்கு வழங்கிய பங்களிப்பாளரின் தொகையினை முழுவதுமாக செலுத்திய 120 நாட்களுக்குப் பிறகுதான் அவர் பயனாளிகளுக்கான தகுதியை பெறுகிறார். (அவர் மீண்டும் புதிய பங்களிப்பாளராக இணைய முடியாது)

★ தற்போது நமக்கு நாமே திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதால், முதல் 120 நாட்களுக்கு மட்டும் 60 வயது உள்ளவர்கள் கூட பங்களிப்பாளராக சேரும் அறிய வாய்ப்பை, தவற விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

★ நமக்கு நாமே திட்டம் ஆரம்பித்த நாளிலிருந்து 120 நாட்களுக்குப் பிறகு, ஒருவர் பங்களிப்பாளராக இணைவதற்கான வயது வரம்பு 20 வயதுக்கு மேல் 59 வயதுக்குள் இருக்க வேண்டும்.

★ ஒரு பங்களிப்பாளர் அறக்கட்டளையில் இணைந்து 120 நாட்களுக்கு பிறகு தான் அவரது இறப்பின் அடிப்படையில் அவரது வாரிசு பயனாளியாக முடியும்.

★ பங்களிப்பாளர் மற்றும் பயனாளி இருவரும் இல்லாத பட்சத்தில் அரசு சட்டப்படி வாரிசு தாரராக உரிமை பெறுபவர் பயனாளி தொகையை பெறுவதற்கான தகுதி உடையவர் ஆவார்.

★ இது குறித்து மேலும் விபரம் அறிய நமது சங்க செயலாளர் துரைபாபு அவர்களின் அலைபேசி எண்ணுக்கு (92821 64723) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொதுக்குழுவில் தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநில சங்க நிர்வாகிகளுக்கு நினைவு பரிசு வழங்கிய தருணம்.


















# 2024-2027ம் ஆண்டுகளுக்கான CVPA நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்



| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | PRO |
|---|---|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு | P. கௌரி பார்த்தசாரதி | V. பாலச்சந்தர் |
| 70109 36732 | 92821 64723 | 98403 74675 | 95511 44144 |



## துணைத் தலைவர்கள்

- **R. சீனிவாசன்** — தென் சென்னை - எஸ் -1 — 98401 27491
- **K. ஜெயக்குமார்** — தென் சென்னை - எஸ் - 2 — 98400 97961
- **M. வேல்முருகன்** — மத்திய சென்னை — 98841 84548
- **A. கௌஸ் பாஷா** — வடசென்னை — 98401 21525

## இணைச் செயலாளர்கள்

- **J. வீரபாண்டியன் (எ) பாபு** — தென் சென்னை - எஸ் - 1 — 97911 54623
- **J. ராதாகிருஷ்ணன்** — தென் சென்னை எஸ் - 2 — 94452 48788
- **A. சீனிவாசன்** — மத்திய சென்னை — 99405 55202
- **P. பிரபாகரன்** — வடசென்னை — 92821 17785

## தென் சென்னை பகுதி செயலாளர்கள் (S1)



| பெயர் | பகுதி | தொலைபேசி |
|---|---|---|
| T.M..ரவி (எ) சங்கர் | தேனாம்பேட்டை | 94443 54829 |
| PC.பழனிவேல் ரஜினி | தி.நகர் | 99629 16006 |
| S. பத்மநாபன் | கோடம்பாக்கம் | 98413 17886 |
| M. ரமேஷ் யாதவ் | விருகம்பாக்கம் | 98844 22856 |
| V. திருமலை | கேகே நகர் | 74183 60231 |
| N.சுரேஷ் | சைதாப்பேட்டை | 98409 99494 |
| A. மோகன்ராஜ் | மேற்கு மாம்பலம் | 99417 77175 |
| D. சரவணன் | போரூர் | 98413 23294 |
| S. எழில் ராஜ் | அசோக் நகர் | 8413 23294 |
| KK.நெடுஞ்சேரலாதன் | வடபழனி | 70105 45516 |

## தென் சென்னை பகுதி செயலாளர்கள் (S2)



| பெயர் | பகுதி | தொலைபேசி |
|---|---|---|
| D. முரளி | பல்லாவரம் | 94440 16083 |
| R. பாபுஜி | தாம்பரம் | 98419 18424 |
| B. சுரேஷ் | மடிப்பாக்கம் | 94444 46851 |
| S. அறிவுடை நம்பி | சோழிங்கநல்லூர் | 99402 23350 |
| N. சங்கர் | வேளச்சேரி | 98849 37578 |
| P. ஹரிஹரன் (எ) பழனி | மயிலாப்பூர் | 98844 11565 |
| D. முரளி | மந்தைவெளி | 98844 31560 |
| E. விஜயகுமார் | குரோம்பேட்டை | 98414 17716 |
| E. சக்தி | திருவான்மியூர் | 90948 80066 |
| D. திலீப் குமார் | ஆதம்பாக்கம் | 98408 44673 |

## மத்திய சென்னை பகுதி செயலாளர்கள்



| பெயர் | பகுதி | தொலைபேசி |
|---|---|---|
| M. ஸ்ரீதரன் | அண்ணா நகர் | 94443 25145 |
| G. ரகுநாத்பாபு | அயனாவரம் | 94441 13871 |
| R. திலீப்குமார் | பட்டாளம் | 98413 00226 |
| S. ராமு | திருவல்லிக்கேணி சிந்தாதிரிப்பேட்டை | 98401 31876 |
| A. லோகநாதன் | புரசைவாக்கம் | 99414 30991 |
| RD. விஜய கிருஷ்ணன் | நுங்கம்பாக்கம் | 98410 93957 |
| S. ராஜன் | வில்லிவாக்கம் | 97102 51451 |
| M. சண்முகம் | ஆயிரம் விளக்கு | 98410 13360 |
| R. சதீஷ் | சூளை | 94447 48606 |
| சேகர் | மதுரவாயல் | 98403 48446 |

## வடசென்னை பகுதி செயலாளர்கள்



| பெயர் | பகுதி | தொலைபேசி |
|---|---|---|
| S. மதிவாணன் | எண்ணூர் | 98841 11155 |
| A. இளங்கோவன் | கொளத்தூர் | 98411 99809 |
| G. ராஜேஷ் | கொடுங்கையூர் | 9176333795 |
| K. விஜய் | பெரம்பூர் | 94442 92035 |
| S. மதன் (எ) மகேந்திரன் | தண்டையார்பேட்டை | 97101 30408 |
| TA. மேகநாதன் | ரெட்ஹில்ஸ் | 98405 79424 |
| N. சுரேஷ்பாபு | வண்ணாரப்பேட்டை | 98418 89508 |
| P. உதயகுமார் | அம்பத்தூர் | 88380 49401 |
| K. ஹரிகுமார் | சௌகார்பேட்டை | 98401 28284 |
| ஸ்ரீ திருமலை | திருவொற்றியூர் | 97908 67162 |

## மதுரவாயல் வடபழனி பகுதிகளுக்கு புதிய பகுதி செயலாளர்கள் அறிவிப்பு



திரு. சேகர்
மதுரவாயல் பகுதி செயலாளர்
98403 48446

நமது சங்கத்தில் நடைபெற்று முடிந்த 14 வது பொது தேர்தலில், வேட்பு மனு தாக்கல் செய்யாத பகுதியாக தேர்தல் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்ட, மதுரவாயல் மற்றும் வடபழனி பகுதிகளுக்கு பகுதி செயலாளராக பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு விண்ணப்பிக்கலாம் என்று, கடந்த மாதம் நமது சங்கத்தின் அதிகாரப்பூர்வ பத்திரிகையான CVPA News-ல் செய்தி வெளியிட்டு இருந்தோம். அதன் அடிப்படையில், திரு.KK. நெடுஞ்சேரலாதன் அவர்கள் வடபழனி பகுதிக்கு, பகுதி செயலாளராகவும், மதுரவாயல் பகுதிக்கு, திரு. சேகர் அவர்களும் பகுதி செயலாளராக, இப்புதிய நிர்வாகத்தின் இரண்டாவதாக நடைபெற்ற செயற்குழுவில் முறையாக தேர்ந் தெடுக்கப்பட்டு CVPA நிர்வாகத்தால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

- CVPA



திரு. KK.நெடுஞ்சேரலாதன்
வடபழனி பகுதி செயலாளர்
70105 45516



நமது சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவர் திரு உமாபதி அவர்களின் பேரன் ஹே. மகேஷ் தனது முதலாம் ஆண்டு பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினார். இவ்விழாவில் நமது சங்க தலைவர் புருஷோத்தமன் அவர்களும், பொருளாளர் திருமதி கௌரி பார்த்தசாரதி அவர்களும், பிஆர்ஓ பாலச்சந்தர் அவர்களும், மற்றும் சங்கத்தின் இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், ஆகியோர் கலந்துகொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.

## அறிவிப்பு

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்.

ஒவ்வொரு ஆண்டும் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கும் வகையில், சங்கம் சார்பாக கல்வி ஊக்கத்தொகை மற்றும் நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. எனவே நடந்து முடிந்த பொதுத்தேர்வில் 10 வது மற்றும் 12வது வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைந்த நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுடைய மதிப்பெண் சான்றிதழை (மார்க் ஷீட்) உடனடியாக நமது சங்க அலுவலகம் அல்லது சங்கத்தின் மூத்த நிர்வாகிகள், அல்லது உங்கள் பகுதியின் துணைத் தலைவர், இணைச் செயலாளர், பகுதி செயலாளர்களிடம் நேரடியாகவோ அல்லது அவர்களின் செல்போனுக்கு வாட்ஸ் அப் வழியாக உடனடியாக மார்க் ஷீட்டை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் குடும்ப விழாவில் நமது குழந்தைகள் பங்குபெறும் நடனம் மற்றும் கலை நிகழ்ச்சி, ஓவியம் வரைதல், பாட்டு போட்டி, பேச்சுப்போட்டி, கவிதை போட்டிகளுக்கு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள உறுப்பினர்களின் பிள்ளைகள் தங்கள் பெயர்களை சங்க நிர்வாகிகளை தொடர்பு கொண்டு முன் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு, CVPA நிர்வாகம்




## வருந்துகிறோம்



நமது சங்கத்தின் கோடம்பாக்கம் பகுதியின் முன்னாள் பகுதி செயலாளர் திரு.மோகன் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு,உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையில் எவ்வித பலனும் இன்றி அவரது உயிர் பிரிந்தது என்பதை கனத்த இதயத்துடன் தெரிவிக்கிறோம். நமது சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். இறுதி அஞ்சலிக்கு பின் நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானப்படி, சங்க உறுப்பினர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 20000 அவர்களின் வாரிசு தாரர்களிடம் வழங்கப்பட்டது.

- CVPA




**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351